செ.வெ.எண்-982 நாள்.07.11.2010.

செய்தி வெளியீடு - நாள் 07.11.2010

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை செயலர் அவர்களுடன் ஆய்வு**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (07.11.2010) மாலை 4.00 மணிக்கு மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை செயலர் திரு. எஸ். சுந்தரேசன், இ.ஆ.ப., அவர்களுடன் வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கும் திட்டத்திற்கு சிலிண்டர்கள் மற்றும் ரெகுலேட்டர்களை துரிதமாக வழங்குவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய எண்ணெய் நிறுவனங்களை சேர்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் எரிவாயு முகவர்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் ஆய்வுக் கூட்டத்தில் பங்கு பெற்றார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில், இலவச எரிவாயு இணைப்புகளுக்கு வருடத்திற்கு 6 சிலிண்டர்கள் என்பதை உயர்த்தி 8 முதல் 10 சிலிண்டர்களாக வழங்கிட கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு மாதமும் சென்னையில் உள்ள அனைத்து மண்டலங்கள் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வரும் வீட்டு உபயோக எரிவாயு நுகர்வோர்களின் குறை தீர் கூட்டங்களில் நுகர்வோர்கள் தெரிவித்துள்ள குறைபாடுகளை தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். குறிப்பாக, நுகர்வோர்கள், சம்பந்தப்பட்ட எரிவாயு முகவர்களிடம் சமையல் எரிவாயு கோரி விண்ணப்பம் செய்யும்போது அவர்களுக்கு அவர்கள் பதிவு செய்த நாளிலிருந்து குறிப்பிடப்பட்ட நாட்களுக்குள் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுவதில்லை. எரிவாயு சிலிண்டர்கள் வழங்கக் கோரும் கோரிக்கைகள் 21 நாட்களுக்குப் பின்னர் தான் எரிவாயு முகவர்களால் பதிவு செய்யப்படுகின்றன. அதன் பின்னர் சிலிண்டர் வழங்க 15 நாட்களுக்கு மேலாகிறது; புதிதாக சமையல் எரிவாயு வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது; நுகர்வோர்கள் அடுப்பு, உபகரணங்கள் மற்றும் மற்றப் பொருட்களை வாங்கவும் கட்டாயப்படுத்தப் படுகின்றனர்; எரிவாயு நுகர்வோர்கள் முகவரி மாற்றம் கோரி விண்ணப்பம் செய்யும் நேர்வுகளில் ஏற்படும் காலதாமதங்கள் போன்ற குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்றும், தொலைபேசி, குறுந்தகவல் மற்றும் பிற வழிமுறைகள் மூலம் எரிவாயு உருளைகள் கோரி பதிவு செய்யும் முறை சீரமைக்கப்பட வேண்டும் என்றும், ஊரகப் பகுதிகளில் நியமனம் செய்யப்படும் எரிவாயு முகவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படுவதன் மூலம் எளிதில் சென்றடைய இயலாத பகுதிகளிலுள்ள மக்களும் எளிதாக எரிவாயு பெற வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் இதுபோன்ற குறைபாடுகள் உடனடியாக களையப்பட வேண்டும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை செயலர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்குவதற்கு போதுமான ரெகுலேட்டர்கள் மற்றும் சிலிண்டர்கள் துரிதமாக வழங்கப்பட வேண்டும் மற்றும் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் பயனாளிகளை சென்றடைய துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் ரெகுலேட்டர்கள் மற்றும் சிலிண்டர்கள் போதுமான அளவு இருப்பு இல்லாத நிலையை விளக்கி கூறினார்கள். எண்ணெய் நிறுவனங்கள் எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு குறித்த பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை செயலரிடம் கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்து, அதனால் கடலோர மற்றும் கிராமப்புற மக்களின் கூடுதல் மண்ணெண்ணெய் தேவை, மற்றும் மழை, வெள்ளச் சேதத்தால் ஏற்படும் இடர்பாடுகளை சமாளிக்கவும் கூடுதலாக மண்ணெண்ணெய் தமிழகத்திற்கு வழங்கவும் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிப்பதாக தெரிவித்த மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை செயலர் அவர்கள் தமிழ்நாட்டில் தற்போது 4 இலட்சம் சிலிண்டர்களும், 2.3 இலட்சம் ரெகுலேட்டர்களும் இருப்பு உள்ளதாகவும் 4.8 இலட்சம் சிலிண்டர்களும், 5.1 இலட்சம் ரெகுலேட்டர்களும் கூடுதலாக பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு 1 இலட்சம் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருவதாகவும், இந்தியாவிலேயே இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்படுவதில் தமிழகம் முதலிடத்திலும், வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு வழங்கப்படுவதில் தமிழகம் இரண்டாம் இடத்தில் இருப்பதாகவும் தெரிவித்து, 31.01.2011க்குள் தமிழ்நாட்டிற்கு தேவையான 6 இலட்சம் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கப்படும் என உறுதி அளித்தார்கள். மேலும், தற்போது இலவச எரிவாயு இணைப்புகள் பெற்ற நுகர்வோர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 6 சிலிண்டர் வரை வழங்கப்பட்டு வந்ததை 8 சிலிண்டர்களாக உயர்த்தி வழங்குவதாவும் உறுதியளித்தார்கள். இயற்கை இடர்பாடுகளை சமாளிக்க கிராமப்புற மற்றும் கடலோர பகுதிகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் கூடுதலாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்கள். எரிவாயு சிலிண்டர் கோரி பதிவு செய்வதற்கு 21 நாட்கள் வரை காத்திருக்க வேண்டும் என்ற நெறிமுறையே இல்லை என்று தெரிவித்து, உடனுக்குடன் நுகர்வோர்கள் தேவையான சிலிண்டர்கள் பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள். நுகர்வோர்களின் குறைபாடுகளை உடனடியாகக் களைய எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஸ்வரன்சிங், இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. டி.எஸ்.எல். பிரசாத், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் எரிவாயு பிரிவின் பொது மேலாளர் திரு.பி.கே.குட்டி, துணைப் பொது மேலாளர் திரு. எஸ். ரவிச்சந்திரன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் பொது மேலாளர்கள் திரு. கே.வி. ஷெனாய் மற்றும் திரு.கே. சாண்டி, இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் துணைப் பொது மேலாளர் (எரிவாயு) திரு. ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கு பெற்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.